வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No.: P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 26.01.2026 திங்கட்கிழமை | இதழ் : 26 | பக்கங்கள் : 08

MARUTHI MONEY EXCHANGE
மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# கிவுல் ஓயா திட்டத்தை எதிர்த்து 30ஆம் திகதி பெரும் போராட்டம்

## பொது அமைப்புகள் - தமிழ்க் கட்சிகள் இணைந்து நடத்துவதற்கு தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜன. 26

அரசாங்கத்தினால் வவுனியா வடக்கில் மேற்கொள்ளப்படவுள்ள கிவுல் ஓயா திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ்க் கட்சிகளினால் 30 ஆம் திகதி மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட உள்ளது.

தமிழர் பகுதிகளை ஆக்கிரமித்து கிவுல் ஓயா திட்டமானது அரசாங்கத்தின் மில்லியன் கணக்கான நிதி ஒதுக்கீட்டோடு மேற்கொள்ளப்பட உள்ளது.

இந்நிலையில் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து குறித்த திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து வவுனியா வடக்கில் எதிர்வரும் 30 ஆம் திகதி பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றினை மேற்கொள்வதற்கு திட்டமிட்டுள்ளது.

இந்நிலையில் பொது அமைப்புகளுடனான கலந்துரையாடல் ஒன்றினை தமிழ் கட்சிகள் இன்று தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் மேற்கொள்வதற்கு தீர்மானித்துள்ளது.

இதற்காக வவுனியாவை சேர்ந்த பொது அமைப்புகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கிவுல் ஓயா திட்டம் தொடர்பில் பல்வேறு எதிர்ப்புகள் தமிழ் அரசியல் கட்சிகளிடமிருந்து கிளம்பியுள்ள நிலையில் அரசாங்கம் தொடர்ந்தும் இத்திட்டத்தை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

## முன்பள்ளி கல்வி சீர்திருத்தத்துக்கு வரலாற்றுச் சிறப்பான நடவடிக்கை

### அரசுக்கு வடக்கு ஆளுநர் பாராட்டு

யாழ்ப்பாணம், ஜன. 26

இலங்கையிலுள்ள முன்பள்ளிக் கல்வி முறையைச் சீர்படுத்தி, அதனை ஒரே தரத்தின் கீழ் கொண்டுவருவதற்குத் தற்போதைய அரசாங்கம் வரலாற்றுச் சிறப்பான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. மாண்புமிகு பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய அவர்கள் இதில் விசேட அக்கறை செலுத்தி வருகின்றார். இத்திட்டம் முழுமையடையும்போது முன்பள்ளி

07



## புதிய அரசியலமைப்பை உருவாக்கும் பணியில் அரசு ஆரம்ப கட்ட நடவடிக்கை எடுக்கவில்லை!

### ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

கொழும்பு, ஜன. 26

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்வதற்கும், புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கும் அரசாங்கம் எவ்வித ஆரம்ப கட்ட நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை. புதிய யாப்பு உருவாக்கத்துக்கான எண்ணக்கரு பத்திரம் சமர்ப்பிக்கப்படும் என்று பிரதமர் குறிப்பிட்டது இன்றளவில் வெறும் அறிவிப்பாகவே காணப்படுகிறது. பத்தரமுல்ல கட்சி காரியாலயத்தில் இருந்து கொண்டு யாப்புருவாக்க பணிகளை முன்னெடுக்க முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை

07

## பாராளுமன்ற குழு தலைவர் பதவியிலிருந்து சிறீதரன் எம்.பியை நீக்க தமிழரசு தீர்மானம்!

மட்டக்களப்பு, ஜன. 26

இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழு தலைவர் பதவியிலிருந்து, சிவஞானம் சிறீதரனை நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே தமிழரசுக் கட்சியில் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் இவ்வாறு குறிப்பிட்டார்.

அரசியலமைப்பு பேரவையிலிருந்து விலகுமாறு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கு கட்சி சார்பில் அறிவுறுத்தல் வழங்கியும், அதனை அவர் பின்பற்றாமையாலேயே, பாராளுமன்றக் குழுத் தலைவர் பதவியிலிருந்து நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும்

07

## வைத்திய அதிகாரிகளின் போராட்டம் தொடர்கிறது!

கொழும்பு, ஜன. 26

சுகாதார அமைச்சினால் இணக்கம் காணப்பட்ட தீர்வுகளை நடைமுறைப்படுத்தத் தவறியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, இன்று முதல் நாடு தழுவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளில் அரச வைத்தியர்கள் தொடர்ச்சியான தொழிற்சங்க போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளனர்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் இதனை இன்று பிற்பகல் அறிவித்துள்ளது. நாடு முழுவதிலும் கடந்த இரண்டு நாட்களாக அரச வைத்தியர்கள்

பணிப் புறக்கணிப்பில்

07

## மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கான படிமுறை அவசியம்!

### சுவிற்சர்லாந்து தூதுவர் வலியுறுத்து

கொழும்பு, ஜன. 26

பல ஆண்டுகளாகத் தேர்தல்கள் நடத்தப்படாததால் மாகாண சபைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லை. ஆகவே மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் அவசியமான படி முறைகளை முன்னெடுப்பது முக்கிய நடவடிக்கையாகும் என்று இலங்கைக்கான சுவிற்சர்லாந்து துதுவர் கலாநிதி சிறி வோல்ட் வலியுறுத்தினார்.

07



## கிவுல் ஓயா திட்டம் தொடர்பில் தமிழ் கட்சிகள் தவறான தகவல்

### அமைச்சர் சந்திரசேகர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 26

கிவுல் ஓயா அபிவிருத்தித் திட்டம் தொடர்பில் தமிழ்க் கட்சிகள் முன்வைத்து வரும் குற்றச்சாட்டுகளை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மறுத்துள்ளார்.

குறித்த திட்டம் இன அல்லது மத அடிப்படையிலான நோக்கங்களுடன்

07



## துணை கணக்காய்வாளர் நாயகத்துக்கு அதிகாரம்!

கொழும்பு, ஜன. 26

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் நிதி விவகாரங்கள் மீதான அதிகாரத்தை, நிதி அமைச்சு அவசரமாக துணை கணக்காய்வாளரிடம் ஒப்படைத்துள்ளது.

கொழும்பு ஊடகம் ஒன்று இதனை தெரிவித்துள்ளது.

கணக்காய்வாளர் நாயகத்தை நியமிப்பதில் ஏற்பட்ட தாமதம் பணியாளர்களின் வேதனத்தை கூட செலுத்த முடியாமல் போகும் அபாயத்தை ஏற்ப டுத்தியதை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

07

## முக்கிய வழக்குகள் தாமதமாவதற்கு புலனாய்வுத் தோல்விகளே காரணம்!

### சட்டமா அதிபர் திணைக்களம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 26

முக்கியத்துவம் வாய்ந்த பல குற்றவியல் வழக்குகளில் நீதி கிடைப்பதில் ஏற்படும் தாமதங்களுக்குத் தாம் பொறுப்பல்ல என்று சட்டமா அதிபர் திணைக்களம் திட்டவட்டமாக மறுத்துள்ளது.

பொலிஸார் சமர்ப்பிக்கும் ஆதாரங்கள் மற்றும் நடைமுறையிலுள்ள சட்டங்களின் அடிப்படையிலேயே முடிவுகள் எடுக்கப்படுவதாகவும் அந்த திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

சட்டமா அதிபர் பரிந்த ரணசிங்கவுக்கு எதிராக அண்மையில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் சமூக

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைகள் புனிதமானவை, கருத்துக்கள் சுதந்திரமானவை



# அரசியலும் கிரிக்கெட் விளையாட்டும் ஒன்று!

## உதய கம்மன்பில கூறுகிறார்

கொழும்பு, ஜன. 26
அரசியலும் கிரிக்கெட் விளையாட்டும் ஒன்றுதான் என்றும், அதில் அரசாங்கம் துடுப்பெடுத்தாடும் போது எதிர்க்கட்சிகள் பந்துவீச்சாளர் களாகச் செயல்படுவதாக பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாவட்ட ஊடக வியலாளர் சங்கத்தினால் அங்க ம்பிட்டிய மைதானத்தில் ஏற் பாடு செய்யப்பட்ட கிரிக்கெட் சுற்றுத் தொடரின் ஆரம்ப நிகழ்வுகளில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள் ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த காலங்களில் அரசா ங்கம் துடுப்பாட்ட வரிசை யில் இருந்தபோது, எதிர்க்கட் சிகள் பந்துவீச்சு மற்றும் களத்தடுப்பில் ஈடுபட்டனர். எதிர்க்கட்சித் தலைவர் அண் மையில் கொண்டுவந்த நம்பிக் கையில்லா தீர்மானம் ஒரு "பவுன்சர்" பந்துவீச்சுக்கு ஒப்பா னது. மேலும், பிரதமர் பதவி யில் இருந்து ஒருவரை நீக்க நடக்கும் முயற்சிகள் கிரிக் கெட்டில் "ரன் அவுட்" செய்வ தற்குச் சமமாகும். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒரு "நோ போல்" மூலம் ஆட்டமிழந்துள்ளார். ஊடகவியலாளர்கள் வருடம் முழுவதும் செய்திகளைத் தேடி ஓடிக்கொண்டிருக்கிறார்கள். தாங்கள் வழங்கும் செய்தி தலைப்புச் செய்தியாக வருமா அல்லது தணிக்கை செய்யப்ப டுமா என்ற பதற்றத்திலேயே அவர்கள் பணிபுரிகின்றனர். கிரிக்கெட் விளையாட்டில் முடிவு உடனுக்குடன் தெரிந்து விடுவதால், இந்த விளையாட்டு ஊடகவியலாளர்களுக்கு ஒரு சிறந்த மன அழுத்த மருந்தாக அமைகிறது. தொடரின் ஆரம் பத்திலிருந்தே ஆர்வத்துடன் பங்கேற்று வரும் தனக்கு, "சிறந்த பார்வையாளர்" என்ற விருதை வழங்க வேண்டும். 2026ஆம் ஆண்டு அனைவருக் கும் வெற்றிகரமான செய்திக ளையும் வாய்ப்புகளையும் வழங்கட்டும் - என்றார். (அ)

# ஜனநாயகத்தை பாதுகாக்கும் 4 ஆவது தூணாக ஊடகர்கள்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, ஜன. 26
ஊடகவியலாளர்கள் ஜனநா யகத்தைப் பாதுகாக்கும் நான் காவது தூணாகச் செயல்படுவ தாக, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள் ளார்.

கொழும்பு மாவட்ட ஊடக வியலாளர் சங்கத்தினால் அங்க ம்பிட்டிய மைதானத்தில் ஏற் பாடு செய்யப்பட்ட கிரிக்கெட் சுற்றுத் தொடரின் ஆரம்ப நிகழ் வுகளில் கலந்துகொண்டு கரு த்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

நிர்வாகம், சட்டவாக்கம் மற்றும் நீதித்துறைக்கு அடுத்த படியாக, ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் நான்காவது தூணாக சுதந்திர ஊடகவிய லாளர்கள் விளங்குகின்றனர். ஊடகவியலாளர்களின் தொழில்முறைப் பணி தேசத்தின் "சமநிலை மற்றும் சரிபார்ப்பு" முறைமைக்கு வலுசேர்க்கிறது. பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் தொடர்ந்து நான்காவது ஆண் டாக இந்தத் தொடரை நடத்து வது பாராட்டுக்குரியது. வெவ்வேறு ஊடக நிறுவனங் களைச் சேர்ந்த ஊடகவியலா ளர்கள் ஒன்றிணைந்து, தங்களுக்கு இடையிலான சகோதரத்துவம், நட்பு மற்றும் நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் ஒரு தளமாக இது அமைகிறது. வெவ்வேறு ஊடக நிறுவனங்களில் பணி யாற்றும் ஊடகவியலாளர்கள் தங்களது பணிப்பழுவை மறந்து, சகோதரத்துவம், நட்பு மற்றும் நல்லிணக்கத்தை வளர் த்துக்கொள்ள இந்த விளை யாட்டுத் தொடர் ஒரு சிறந்த தளமாக அமையும் - என்றார். (அ)

# சர்வதேச நிதி நிறுவனம் இலங்கையில் 166 மில்லியன் அமெ. டொலர் முதலீடு!

கொழும்பு, ஜன. 26
உலக வங்கி குழுமத்தின் அங்கத்துவ அமைப்பான சர்வ தேச நிதி நிறுவனம், இலங்கை வணிகங்களுக்கு ஆதரவளிப்பத ற்கும், நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையிலிருந்து நிலை யான வளர்ச்சியை நோக்கிய மாற்றத்தை விரைவுபடுத்துவதற் கும் 166 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான உயர் மட்ட முதலீட்டுத் திட்டத்தை அறிவித்துள்ளது.

இலங்கையின் தனியார் துறைக்கான தனது நீண்டகால அர்ப்பணிப்பை இது மீள உறு திப்படுத்துவதாக சர்வதேச நிதி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த விரிவான நிதியானது, சிறு மற்றும் நடுத்தர அளவி லான நிறுவனங்களுக்கான நிதி அணுகலை விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. குறிப்பாக பெண்களுக்குச் சொந்தமான வணிகங்கள் மற்றும் விவசாய வணிகத் துறையை வலுப்படுத்துவதில் இது அவதானம் செலுத்துவ தாக சர்வதேச நிதி நிறுவனம் தனது அறிக்கையில் குறிப்பிட் டுள்ளது.

இலங்கைப் பொருளாதாரத் தின் இத்தகைய முக்கிய துறை களைக் குறிவைப்பதன் மூலம், உள்கட்டமைப்பு வளர்ச்சியைத் தூண்டுவதற்கும், பின்தங்கிய குழுக்களுக்கான வேலை வாய் ப்புகளை உருவாக்குவதற்கும் இந்த நிதி உதவி எதிர்பார்க்கப்ப டுகிறது.

இந்த முதலீடு இலங்கையின் முன்னணி மூன்று தனியார் வணிக வங்கிகளில் மூலோபாய ரீதியாக மேற்கொள்ளப்பட்டுள் ளது.

இவ்வாறு வழங்கப்படும் நிதி உதவியில் 50 மில்லியன் டொலர் கடன் உதவியாகும். 80 மில்லியன் டொலர் அபாயப் பகிர்வு வசதிகளாக வும், எஞ்சிய 36 மில்லியன் டொலர் வர்த்தக நிதி ஆதர வாகவும் அறிவிக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இந்தியாவில் கைது செய்யப்பட்ட குற்றவாளி புலனாய்வு பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைப்பு

கொழும்பு, ஜன. 26
சர்வதேச பொலிஸாரி னால் சிவப்பு எச்சரிக்கை விடு க்கப்பட்டு, வெளிநாட்டில் தலைமறைவாக இருந்த பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த குற்றவாளி ஒருவர் இந்தியாவிலிருந்து நேற்று முன் தினம் பிற்பகல் விமானம் மூலம் நாட்டிற்கு அழைத்து வரப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் அழைத்து வரப்பட்ட பின்னர், கட்டு நாயக்க விமான நிலையத்தில் வைத்து குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் பொறுப்பேற்கப்பட்டதுடன், மேலதிக விசாரணைகளுக்காக அவர் வாழைத்தோட்டம் பொலிஸாரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளார்.

இவ்வாறு அழைத்து வரப்பட்டவர் வாழைத்தோட் டம் பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய செல்வத்தே தினுக்க எனத் தெரிவிக்கப் படுகிறது.

சந்தேகநபருக்கு எதிராக பல கொலைகள், கொள்ளைச் சம்பவங்கள் மற்றும் போதைப் பொருள் வைத்திருந்தமை தொடர்பான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளதாக பொலி ஸார் குறிப்பிட்டனர். 2021 ஆம் ஆண்டு கொட்டாஞ் சேனை பொலிஸ் பிரிவில் கையெறி குண்டு வைத்திருந் தல் மற்றும் கெஸ்பேவ, வெள்ளவத்தை மற்றும் புளூ மெண்டல் பொலிஸ் பிரிவுக ளில் கொள்ளை மற்றும் போதைப்பொருள் வைத்திருந் தல் ஆகிய குற்றச்சாட்டுக்கள் குறித்த நபர் மீது சுமத்தப்பட் டுள்ளன. சந்தேகநபர் தொடர் பான மேலதிக விசாரணைகள் கொழும்பு பிரிவுக்கு பொறுப் பான பிரதிப் பொலிஸ் மாஅதிபரின் கீழ் முன்னெடுக் கப்படவுள்ளன. (அ)

# சுற்றுலா பயணிகள் வருகை அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 26
நுவரெலியாவில் நிலவும் மாறுபட்ட காலநிலை காரண மாகவும் ஞாயிறு வார விடு முறை என்பதாலும் சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரி த்துள்ளது. நுவரெலியாவில் பல்வேறு இடங்களில் தற்போது தொடர்ச்சியாக அதிகாலையில் துகள் உறை பனிப்பொழிவும், பகல் நேரங்களில் உஷ்ணமான காலநிலையும், மாலை வேளை யிலும் பனிமூட்டம் நிலவி வருகிறது .

பனிமூட்டத்துடன் கூடிய அதிகரித்த கடும் குளிரான கால நிலையும் மாறுபட்டு காணப்ப டுகின்றதுஇ இவ்வாறு நிலவும் இதமான காலநிலை சுற்றுலாப் பயணிகள் மகிழ்ச்சியாக அனுப வித்து வருகின்றனர். இவ்வா றான குளு குளு காலநிலையை அனுபவிக்க இலங்கையில் மட் டுமில்லாது, வெளிநாடுகளில் இருந்தும் அதிக அளவிலான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்த வண்ணம் உள்ளனர். இதன் காரணமாக நுவரெலியாவிற்கு உள் நுழையும் பிரதான வீதிகள் சில நேரங்களில் வாகனங்கள் அணிவகுத்துச் செல்கின்றன.

குறிப்பாக வெள்ளிக்கிழமை மாலை முதல் நுவரெலியாவி ற்கு வரும் சுற்றுலா பயணிக ளின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளது. அதுவும் சனி மற்றும் ஞாயிறு விடுமுறை தினங்கள் என்பதால் சுற்றுலா பயணிகள் கூட்டம் அலை மோதியது.

நுவரெலியாவில் உள்ள அனைத்து சுற்றுலா தலங்க ளிலும் சுற்றுலா பயணிகள் கூட்டமாகவே காணப்படுகி ன்றன. இதில் விக்டோரியா தாவரவியல் பூங்காவிலும் பழமையான பிரதான அஞ்சல் அலுவலகம் பகுதி யிலும் நுவரெலியா - பதுளை பிரதான வீதியோரத்தில் உள்ள கிரகரி வாவி பகுதிகளிலும் காலை முதலே ஆயிரக்கணக் கான சுற்றுலா பயணிகள் தமது குடு ம்பத்துடன் வருகை தந்திருக்கி ன்றமைக் குறிப்பிடத்தக்கது. (அ)

# வடமராட்சி கிழக்கில் போக்குவரத்து சீரின்மை

யாழ்ப்பாணம், ஜன. 26
வடமராட்சி கிழக்கு போக் குவரத்து சீரின்மை காரணமாக பலரும் தொடர்ச்சியாக பாதிக் கப்பட்டுள்ளனர்.

அண்மையில் அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் க. பொ.த. உயர்தரப் பரீட்சை எழுதிய மாணவர்கள் மருதங் கேணிவரை நடந்து சென்றுள் ளனர்.

பருத்தித்துறை கேவில் வரை போக்குவரத்து சேவையில் ஈடுபடும் அரச மற்றும் தனியார் பேருந்துகள் தாமதமாக புறப் படுதலால் பலரும் பாதிக்கப் படுவதாக பயணிகள் விசனம் வெளியிட்டுள்ளனர். (அ)

# பிள்ளைகளின் மனநிலைக்கு பொருத்தமற்ற விடயங்களைப் புகுத்த அரசாங்கம் முயற்சி!

## பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார

கொழும்பு, ஜன. 26
தரம் 6 மாணவர்களுக்கான கல்விச் சீர்திருத்தங்கள் மூலம் பிள்ளைகளின் மனநிலைக்குப் பொருத்தமற்ற விடயங்களைப் புகுத்த முயற்சிப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

அரசாங்கம் கல்விச் சீர்திருத் தங்களை மேற்கொள்வதை தாம் எதிர்க்கவில்லை. ஆனால் தற்போதைய மாற்றங்கள் கலா சாரம் மற்றும் ஒழுக்க விழுமி யங்களுக்குப் புறம்பானது. கல்வி அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவர எதிர்க் கட்சி தயாராகி வருகிறது. இந் தப் பிரேரணையை வெற்றி பெறுவதை விட, கல்வியில் அரசாங்கம் ஏற்படுத்தியுள்ள அழிவை நாட்டுக்கு வெளிப்ப டுத்துவதே முக்கிய நோக்கமா கும். தற்போதைய அரசாங்கம் அமைச்சரவையினால் அல்ல, மாறாக அதிகாரிகளாலேயே இயக்கப்படுகிறது. அமைச்சர் கள் வெறும் பொம்மைகளாகச் செயற்படுகின்றனர். உண்மை யான அதிகாரம் சில அரசியல் சக்திகளிடமே இருக்கிறது. சட்டமா அதிபர் மற்றும் கணக்காய்வாளர் நாயகம் போன்ற பதவிகளுக்கு அரசாங் கம் தமக்குச் சாதகமானவர் களை நியமிக்க முயற்சிப்பது, நாட்டை ஒரு சர்வாதிகாரப் பாதையில் இட்டுச் செல்லும் செயலாகும். மக்கள் ஆணை இல்லாத இந்த அரசாங்கம் அதிகாரத்தைத் தக்கவைக்க எடுக்கும் முயற்சிகள் தோல்வி யடையும். மக்கள் விரைவில் இதற்குத் தகுந்த பதிலடி கொடு ப்பார்கள் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
26.01.2026 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், தை 12

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# அரசியலில் நம்பிக்கை

நம்பிக்கை இல்லாமல் எந்தவொரு காரியத்திலும் ஈடுபட முடியாது - அரசியல் தீர்வு முயற்சியின் போதும் நம்பிக்கையின் அடிப்படையில்தான் இலங்கை தமிழரசு கட்சி செயற்பட்டது - இந்த அடிப்படையில்தான் அடுத்த பொங்கலுக்கு தீர்வு - தீபாவளிக்கு தீர்வு என்றாவாறு கூறப்பட்டது. ஆனால் இதனை பலரும் ஒரு பகிடியாகவே பார்த்தனர் - காலம் சென்ற சம்பந்தனை மேற்கோள் காண்பித்து, தமிழரசுக் கட்சியின் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார். திருகோணமலை பொங்கல் நிகழ்வின்போது தை பிறந்தால் வழிபிறக்கும் என்னும் கூற்றை முன்வைத்தே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கின்றார்.


அவர் கூறுவது முற்றிலும் சரியான விடயம்தான் - நம்பிக்கையின்றி எந்தவொரு விடயத்தையும் முன்னெடுக்க முடியாது - எனவே நம்பிக்கை வைக்கவேண்டியது அவசியம். ஆனால் ஒரு வியாபார முயற்சியில் நம்பிக்கையுடன் ஈடுபட்டவர் கூட, தனது முயற்சி எதிர்பார்த்த பலனை தராதபோது தனது உக்தியை மாற்றிக் கொள்வார் அல்லது அந்த வியாபார முயற்சியை கைவிட்டுவிட்டு வேறு ஒரு பொருத்தமான முயற்சி பற்றி யோசிப்பார். இது சாதாரண விடயம். ஒரு தனிப்பட்ட முயற்சியின் போதே ஒருவர் இவ்வாறு யோசிக்க வேண்டும் என்னும்போது, ஒரு இனத்தின் அரசியல் எதிர்காலம் தொடர்பான விடயத்தில் எந்தளவிற்கு கவனமாகவும் தூரநோக்கோடும் சிந்திக்க வேண்டும், செயலாற்றவேண்டும்.

சம்பந்தன், அவர் போன பாதையில் நம்பிக்கை வைத்ததோ அல்லது இலங்கை தமிழரசுக் கட்சி ஒரு விடயதில் நம்பிக்கை வைத்து செயலாற்றுவதோ இங்கு பிரச்னையில்லை - ஆனால், அந்த முயற்சி தோல்வியுற்ற பின்னர் - அது தொடர்பில் கற்றுக்கொண்டு, புதிய அணுகுமுறைகள் தொடர்பில் சிந்திக்கப்படாதபோது அல்லது தங்களின் தவறுகளை திருத்திக் கொள்ளும் முயற்சியில் ஒரு கட்சி ஈடுபட்டபோதுதான், அந்த கட்சியின் திசை வழி தொடர்பில் கேள்வி எழுகின்றது. என்பதுதான் கேள்வி.

பொங்கலுக்கு தீர்வு - தீபாவளிக்கு தீர்வு என்று நம்புவதில் பிரச்னையில்லை - முன்னர் நம்பியது போன்று இனியும் நம்பலாம் ஆனால் அவ்வாறான தீர்வு ஒன்றை அடைய முடியாமல் போகும்போது, அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்வதில் எந்தளவிற்கு பொறுப்புடன் ஒரு கட்சி நடந்து கொண்டது என்பதுதான் வியடமாகும். ஒரு அரசியல் கட்சியு பொறுப்புடன் செயலாற்றுகின்றதா அல்லது இல்லையா என்பதை இந்த அடிப்படையில்தான் நாம் மதிப்பிட வேண்டும்.

ரணில்–மைத்திரி ஆட்சிக் காலத்தில் ஒரு புதிய அரசியல் யாப்பு தொடர்பில் நம்பிக்கை கொண்டு செயற்பட்டது தவறல்ல ஆனால் ஒருவேளை அந்த முயற்சி தோல்வியுற்றால், நம்மிடமுள்ள மாற்றுத் திட்டம் என்ன என்பதில் கட்சியிடம் தெளிவான நிலைப்பாடு இருந்ததா - இந்தக் கேள்வி வெறுமனே தமிழரசுக் கட்சிக்கு உரியது மட்டுமல்ல மாறாக அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கத்துவம் வகித்த அனைத்து கட்சிகளின் தலைமைக்கும் உரியது. சம்பந்தன் நம்பிக்கை வைக்கச் சொன்னார், அதனால் நாங்களும் பின்னால் இழுபட்டுப் போனோம் என்று சொல்ல முற்பட்டால் ஒரு கட்சியின் தலைமைக்கு அழகல்ல. அரசியல் அணுகுமுறைகள் என்பது ஒரு கட்சியின் நிகழ்கால ஆற்றலோடு தொடப்புடைய ஒன்றல்ல மாறாக, அதன் கடந்தகால அனுபவங்களோடு தொடர்புடையது. கடந்த காலத்திலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய அரசியல் பொறுப்புணர்வை, நிகழ்காலத்தில் நிராகரிக்கும்போது, இறுதியில் எஞ்சுவது ஏமாற்றம் மட்டும்தான். தமிழ்த் தேசிய அரசியலின் பாதையில் கிடைத்திருக்கும் அனுபத்தை தொகுத்து நோக்கினால் ஒருவர் இதனை இலகுவாக புரிந்துகொள்ள முடியும்.

# நாகர்கோவில் கடலில் மீன்பிடி நாள் தொழில் நேற்று ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஜன. 26

நாகர்கோவில் பெரும் கடற்கரையில் கரைவலை மீன்பிடி நாள் தின நிகழ்வு நேற்று சம்பிரதாயபூர்வமாக இடம்பெற்றது.

குறித்த மீனவ சம்மாட்டிமார்கள், கடற்றொழிலாளர்கள், நாளாந்தம் கூலி வேலை செய்யும் குடும்ப மீனவர்கள் ஒன்றிணைந்து கரைவலை மீன்பிடி நாள் தின நிகழ்வை கொண்டாடினர்.

கரைவலையில் பிடிக்கப்பட்ட மீன்பிடிகளை கரைக்கு எடுத்து வந்து வாடிக்கையாளர்களுக்கான நாள் விற்பனை சந்தைப்படுத்தலை மீனவ சம்மாட்டிமார்கள், கடற்றொழிலாளர்கள், நாளாந்தம் கூலி வேலை செய்யும் குடும்ப மீனவர்கள் முன்னெடுத்தனர். (அ)

# ஈ.பி.டி.பியை எழுச்சி கொள்ள வையுங்கள்!

## டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 26

தேசிய மாநாட்டினை நடத்தி ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியை எழுச்சி கொள்ள வைப்பதற்கு தயாராகுமாறு கட்சி உறுப்பினர்களுக்கு அக்கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அழைப்பு விடுத்துள்ளார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் அவர் இவ்வாறு அழைப்பு விடுத்தார்.

மேலும், மாற்றம் பற்றிய எதிர்பார்ப்புடன் வாக்களித்த மக்களுக்கு இதுவரையில் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாத நிலையே தொடருகின்ற போதிலும், பல்வேறு சவால்கள் மிகுந்த சூழலில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள அரசாங்கத்திற்கு இன்னும் கால அவகாசம் வழக்க வேண்டும் என்பதே. நியாயமான நிலைப்பாடாக இருக்கும் என அவர் தெரிவித்தார்.

எந்தவொரு அரசும் தமிழ் பேசும் மக்களுக்கு எதையும் தாம்பாளத் தட்டில் ஏந்தி வந்து தாமாக தரப்போவதில்லை என தெரிவித்த டக்ளஸ் தேவானந்தா எமது நண்லெண்ண சமிஞ்ஞையாலும் சினேக பூர்வ உரையாடலாலும் தேசிய நல்லிணக்க வழிநின்றே நாம் எதையும் பெற வேண்டும் என அவர் கூறினார். (அ)

# கப்பலேந்திமாதா ஆலயத்தில் நேற்று செபஸ்தியார் திருவிழா

யாழ்ப்பாணம், ஜன. 26

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கப்பலேந்திமாதா ஆலயத்தில் புனித செபஸ்தியார் பெருவிழா நேற்று கொண்டாடப்பட்டது

இத் திருவிழா திருப்பலி காலை 05.30 மணியளவில் திருச்செபமாலையுடன் கட்டைக்காட்டு பங்குத் தந்தை வணபிதா வசந்தன் தலைமையில் ஆரம்பமாகி பெருவிழா திருப்பலியை யாழ்.மறைமாவட்ட குடும்ப நலமைய (அகவொளி) இயக்குநர் அருட்தந்தை டேவிட்டால் ஒப்புக்கொடுக்கப்பட்டது.



திருவிழா திருப்பலியை தொடர்ந்து புனித செபஸ்தியாரின் திருச்சொரூப பவனியும் அதனை தொடர்ந்து செபஸ்தியாரின் ஆசீர்வாதம் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.

திருவிழா திருப்பலியில் அருட் தந்தையர்கள், அருட் சகோதரர் மற்றும் அதிகளவான பக்தர்கள் கலந்து கொண்டனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
எடுத்த வேலையை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். பிள்ளைகளை அன்பால் அரவணைத்துச் செல்லுங்கள். நெருங்கிய வர்கள் சிலரால் தர்மசங்கடமான சூழ்நிலையை சமாளிக்க வேண்டி வரும்.

**இடபம்**
எதையும் சாதிக்கும் துணிச்சல் வரும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். சபைகளில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். சிறப்பான நாள்.

**மிதுனம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். பிள்ளைகளால் பெருமை அடைவீர்கள். பயணங்களால் பயனடைவீர்கள். விஐபிகள் அறிமுகமாவார்கள். சாதிக்கும் நாள்.

**கடகம்**
இன்றைய நாள் கணவன் மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும் மகிழ்ச்சி தங்கும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். அதிர்ஷ்டமான நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் முக்கிய விஷயங்களை நீங்களே நேரடியாக சென்று முடிப்பது நல்லது. குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்ற போராட வேண்டியிருக்கும்.

**கன்னி**
உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். கல்யாணப் பேச்சு வார்த்தை கைகூடி வரும். மனைவி வழியில் நல்ல செய்தி வரும். ஆடை ஆபரணம் சேரும். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு.

**துலாம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள்.

**விருட்சிகம்**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். தாயாருடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். நவீன மின்னணு சாதனங்கள் வாங்குவீர்கள்.

**தனுசு**
பேச்சில் முதிர்ச்சி தெரியும். சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். வாகனப் பழுதை சரி செய்வீர்கள்.

**மகரம்**
குடும்பத்தில் இதுவரை இருந்த கூச்சல் குழப்பங்கள் நீங்கி மகிழ்ச்சி தங்கும். கடனாக கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். உத்தியோகத்தில் அமைதி நிலவும். மனசாட்சி படி செயல்படும் நாள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். குடும்பத்தில் சண்டை சச்சரவுகள் வந்து நீங்கும். அவசரப்பட்டு அடுத்தவர்களை விமர்சிக்க வேண்டாம்.

**மீனம்**
நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். எதிர்பாராத உதவி கிட்டும் நாள்.

# முன்பள்ளி கல்வி முறையை சீர்படுத்த அரசாங்கம் சிறப்பு மிக்க நடவடிக்கை

## வடமாகாண ஆளுநர் வேதநாயகன் பாராட்டு

யாழ்ப்பாணம், ஜன. 26

இலங்கையிலுள்ள முன்பள்ளி கல்வி முறையை சீர்படுத்தி, அதனை ஒரே தரத்தின் கீழ் கொண்டுவருவதற்கு தற்போதைய அரசாங்கம் வரலாற்றுச் சிறப்பான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. பிரதமர் ஹரிணி அமரசூரிய இந்த விடயத்தில் விசேட கவனம் செலுத்தி வருகின்றார். இந்தத் திட்டம் முழுமையடையும்போது முன்பள்ளி தொடர்பான பல குறைபாடுகள் தீர்க்கப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

காரைநகர், புதுவீதியில் அமைந்துள்ள அம்பாள் முன்பள்ளியின் புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு புதிய கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: "பிள்ளைகளின் ஆளுமை விருத்தியில் முன்பள்ளி கல்வியே முக்கிய பங்காற்றுகின்றது. அதுவே சிறந்ததொரு எதிர்காலச் சமூகத்துக்கான அத்திபாரமுமாகும். பெற்றோர்கள் பாடங்களைக் கற்பிக்கும் இடங்களை விட, நல்ல பழக்க வழக்கங்களைப் போதிக்கும் இடங்களிலேயே தங்கள் பிள்ளைகளைச் சேர்க்க வேண்டும். சிறுபராயத்தில் அவர்கள் பழகும் நற்பண்புகளே அவர்களைச் சமூகத்தில் சிறந்தவர்களாக வழி நடத்தும்.

இலங்கையில் முன்பள்ளிகள் வெவ்வேறு கற்பித்தல் முறைகளைக் கொண்டுள்ளன. இதனைச் சீர்படுத்தி, ஒருங்கமைக்கப்பட்ட பாடத்திட்டத்தைக் கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. வடக்கு மாகாண சபையால் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு போதாது என்பதை நான் அறிவேன். தற்போதைய நிலையில் அதனை உடனடியாக அதிகரிக்க முடியாவிட்டாலும், எதிர்காலத்தில் அரசாங்கம் இதனை ஒரு நிரந்தரக் கட்டமைப்புக்குள் கொண்டு வரும்போது இப்பிரச்னைகளுக்குத் தீர்வு கிட்டும்". - என்றார்.

# வடமாகாணத்தில் 1000 பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவித்திட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 26

வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கிய வாழ்வாதார சவால்களை எதிர்கொண்டுள்ள சுமார் 1000 பெண் தலைமைத் துவ குடும்பங்களுக்கு தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டம் அமுல்ப டுத்தப்படவுள்ளது. இந்தத் திட் டத்தின் முதல் கட்டமாக நாளை மறுதினம் 28 ஆம் திகதி புதன்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அர சாங்க அதிபர் சு. முரளிதரன் தலைமையில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

இதில், 181 பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தக் கூடிய வகையில் அவர்களுக்கு ஏற்ற வாழ்வாதார பொறிமுறைகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளன.

கடந்த கால போர் சூழ்நிலை காரணமாகவும் அண்மையில் ஏற்பட்ட புயல் அனர்த்தம் காரணமாகவும் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு இந்த உதவித் திட்டம் வழங்கப்படவுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் அவர்களின் குழந்தைகளின் கல்வி, ஆரோக்கியம் மற்றும் வாழ்க்கைத் தரம் மேம்பட உதவும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

இந்தத் திட்டத்துக்கான நிதிப் பங்களிப்பை சிங்கப்பூரைச் சேர்ந்த துரை தம்பதி, மற்றும் சரசீஜா ராமன் உள்ளிட்டோர் வழங்க முன் வந்துள்ளனர்.

இலங்கையில் அதிக வறுமைக் கோட்டுக்குட்பட்ட மாவட்டங்களில் முதலிடத்தில் கிளிநொச்சி, இரண்டாவது இடத்தில் முல்லைத்தீவு, ஐந்தாவது இடத்தில் மன்னார் மற்றும் 11 ஆவது இடத்தில் வவுனியா ஆகிய மாவட்டங்கள் உள்ளன. அந்த வகையில் இந்த உதவித் திட்டம் முதலில் கிளிநொச்சி, இரண்டாவது முல்லைத்தீவு, அதன் பின்னர் மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் என்ற ஒழுங்கில் வழங்கப்படவுள்ளது என்று யாழ். வணிகர் கழகத்தின் முன்னாள் தலைவர் இ. ஜெயசேகரன் அறிவித்துள்ளார். (எ)

# யாழ். பல்கலைக்கழகத்தில் பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன. 26

யாழ். பல்கலைக்கழக வணிக மற்றும் முகாமைத்துவ பீட, வியாபார முகாமைத்துவ கற்கை வெளிவாரி 3ஆம் வருட மாணவர்களின் ஏற்பாட்டில் தைப்பொங்கல் விழா நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பாரம்பரிய முறைப்படி கோலமிட்டு, தோரணம் கட்டி, பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள ஆலயத்துக்கு முன்பாக பொங்கல் வழிபாடுகள் நடைபெற்றன.

பொங்கல் நிறைவுற்றதும் சூரியனுக்கு படையல் வைத்து, பூஜை வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன.




இந்த பொங்கல் விழாவில் மாணவர்கள், விரிவுரையாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (எ-05)

# மானிப்பாய் பிரதேச சபை அமர்வில் கணக்கறிக்கையால் சர்ச்சை

யாழ்ப்பாணம், ஜன. 26

மானிப்பாய் பிரதேச சபை அமர்வின் போது கணக்கறிக்கை தொடர்பான பிரச்னையால் அந்த கணக்கறிக்கை தூக்கி வீசப்பட்டது.

குறித்த பிரதேச சபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் ஜெசீதன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது சபையில் கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த கணக்கறிக்கையை உடனே வழங்குவதால் அதில் உள்ள பிழைகளை கண்டுபிடிப்பது கடினம் என்றும் அந்த கணக்கறிக்கையை கூட்டம் நடைபெறுவதற்கு முன்னைய நாட்களில் வழங்க வேண்டும் என்று உறுப்பினர் நா. பகீரதன் தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட தவிசாளர் ஜெசீதன், கணக்கறிக்கையில் தவறு உள்ளது என்றால், அந்த அறிக்கை சபையில் முன்மொழிந்து, வழிமொழிய முன்னர் அதில் தவறு உள்ளது என்று கூற வேண்டும். எல்லாம் முடிந்த பின்னர் கூறக்கூடாது- என்றார்.

இதனால், தவிசாளருக்கும் குறித்த உறுப்பினருக்கும் இடையே கடுமையான வாதப் பிரதிவாதங்கள் ஏற்பட்டன. இந்த நிலையில் உறுப்பினர் தனது கையில் இருந்த கணக்கறிக்கையை தூக்கி வீசி எறிந்ததால் சபையில் பரபரப்பு ஏற்பட்டது. (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ. 450 கோடி மதிப்புள்ள போதைப்பொருளுடன் 11 சந்தேகநபர்கள் தெற்கு கடற்பரப்பில் கைது

கொழும்பு, ஜன. 26

தெற்கு கடற்பரப்பில் போதைப்பொருள் கடத்திச் சென்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட இரு படகுகளில் 450 கோடி ரூபாய் பெறுமதியான போதைப்பொருட்கள் இருந்தன என்று பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

பொலிஸார் வழங்கிய தகவலின் அடிப்படையில் இந்த இரு படகுகளையும் கைப்பற்றினர். அப்போது ஒரு படகில் 5 பேரும், மற்றைய படகில் 6 பேரும் இருந்தனர் என்று கடற்படையின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்த இரு படகுகளிலிருந்தும் சுமார் 285 கிலோவுக்கும் அதிகமான போதைப்பொருள் இருந்தது என்றும் தெரிவிக்கப் பட்டது.

கைப்பற்றப்பட்ட இரு படகுகளும் 11 சந்தேகநபர்களும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப் பட்டனர். (ஐ)

# கால்நடைகளை மேய்ச்சலுக்கு அழைத்து சென்ற பெண் கொலை

கொழும்பு, ஜன. 26

கால்நடைகளை மேய்ச்சலுக்காக காட்டுக்கு அழைத்துச் சென்ற பெண் ஒருவர் கொல்லப் பட்டுள்ளார்.

பதுளை - மஹாஓயா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பெரகல வனப்பகுதியில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், வராபிட்டிய பிரதேசத்தை சேர்ந்த 46 வயதுடைய பெண்ணே கொல்லப்பட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை குறித்த பெண் மேய்ச்சலுக்காக வனப் பகுதிக்குக் கொண்டு சென்றுள்ளார். நீண்டநேரமாக அவர் வீட்டுக்கு வராததால் உறவினர்களும் பிரதேசவாசிகளும் இணைந்து தேடியபோது, ஓடை ஒன்றில் வெட்டுக் காயங்களுடன் அவரின் சடலம் மீட்கப்பட்டது.

இந்தக் காரணம் தெரிய வரவில்லை. சந்தேகநபர்களை பொலிஸார் தேடி வருகின்றனர்.

# சுறா மீன் வேட்டையாடிய 7 சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, ஜன. 26

870 கிலோவுக்கும் அதிகமாக வேட்டையாடப்பட்ட சுறா மீன்களுடன் 7 பேர் கைது செய்யப்பட்டனர் என்று கடலோர காவல்படை தெரிவித்துள்ளது.

இவர்கள், புத்தளம் - வென்னப்புவவில் உள்ள வெல்லமங்கரை கடற்றொழில் துறைமுகத்தில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது, 876.2 கிலோகிராம் சுறா மீன்கள் (அலோபியாஸ் வல்பினஸ்) பறிமுதல் செய்யப்பட்டன.

சந்தேக நபர்கள், பறிமுதல் செய்யப்பட்ட சுறா மீன்கள் மற்றும் கடற்றொழில் படகு ஆகியவை மேலதிக விசாரணைகள் மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்காக வென்னப்புவவில் உள்ள நீரியல் வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையின் கடற்றொழில் விதிமுறைகளின் கீழ் சுறா மீன் பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளது. குறைந்து வரும் எண்ணிக்கை மற்றும் பாதுகாப்பு கவலைகள் காரணமாக இவை பாதுகாக்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கடலில் மூழ்கி ரஷ்ய பெண் உயிரிழப்பு

கொழும்பு, ஜன. 26

கடலில் நீராடிய வெளிநாட்டு பெண் ஒருவர் மூழ்கி உயிரிழந்தார். கடந்த மூன்று நாட்களில் வெளிநாட்டு சுற்றுலா பயணி உயிரிழந்த இரண்டாவது சம்பவமாக இது பதிவாகியுள்ளது.

காலி - பெந்தோட்டையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், ரஷ்யாவை சேர்ந்த 49 வயதுடைய பெண் ஆவார்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பாக பெந்தோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# லசித் மலிங்கவின் ஒப்பந்தம் நிறைவு



கொழும்பு, ஜன. 26

இலங்கை கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சு ஆலோசகராக லசித் மலிங்கவின் ஒப்பந்தம் நேற்று முன்தினத்துடன் நிறைவடைந்தது.

இருப்பினும், அடுத்த செவ்வாய்க்கிழமை நடைபெறும் இறுதி ஒருநாள் போட்டிகள் வரை அவர் இலங்கை அணியுடன் இருப்பார் என்று இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

உலகக் கிண்ணம் முடியும் வரை மலிங்கவின் சேவைகளை இலங்கை கிரிக்கெட் சபை தக்க வைத்துக் கொள்ள திட்டமிட்டிருந்தாலும் மூன்றாவது ஒருநாள் போட்டிக்கு பின்னர் லசித் மலிங்க அவுஸ்திரேலியா செல்ல திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஜன. 26

மைக்ரோ ரக துப்பாக்கி மற்றும் தோட்டாவுடன் ஒருவரை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

காலி - அம்பலாங்கொடை - வதுகெதர பிரதேசத்தில் வைத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

அக்மீமன விசேட அதிரடிப் படை அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமையவே நேற்று முன்தினம் சந்தேகநபர் கைது செய்யப் பட்டார்.

வதுகெதர பகுதியைச் சேர்ந்த 33 வயது நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். அவர், குறித்த துப்பாக்கியை வேறொரு தரப்பினருக்கு விற்பனை செய்யவிருந்தமை பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (ஐ)

# சொந்தமாக வீடு வாங்க உலகில் கடினமான நகரமாக கொழும்பு!

கொழும்பு, ஜன. 26

சொந்தமாக ஒரு வீடு அல்லது தொடர்மாடி குடியிருப்பு வாங்குவதற்கு, உலகிலேயே மிகவும் கடினமான மற்றும் கட்டுப்படியாகாத நகரமாக கொழும்பு தரப்படுத்தப்பட்டுள்ளது.

2026ஆம் ஆண்டுக்கான "Numbeo" சொத்து முதலீட்டு சுட்டெண்ணின் அண்மைக் கால தரவுகளின்படியே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

கொழும்பில் உள்ள வீடுகளின் விலைக்கும் வருமானத்திற்குமான விகிதம் 55.1 ஆகப் பதிவாகியுள்ளது.

உலகெங்கிலும் கணக்காணிக்கப்பட்ட 395 நகரங்களில் இதுவே மிக அதிகப்படியான விகிதமாகும். இந்த வரிசையில் கொழும்புக்கு அடுத்ததாக நேபாளத்தின் காத்மாண்டு (39.2) இரண்டாம் இடத்திலும், பிலிப்பைன்ஸின் மணிலா (35.9) மூன்றாம் இடத்திலும் உள்ளன.

மும்பை (33.3), சிங்கப்பூர் (22.1) போன்ற நகரங்களை விடவும் கொழும்பில் வீடு வாங்குவது சாதாரண மக்களுக்கு எட்டாக்கனியாக மாறியுள்ளது.

கொழும்பில் வசிக்கும் ஒரு சராசரி குடும்பத்தின் மாத வருமானத்துக்கும் அங்குள்ள நிலத்தின் அல்லது கட்டிடங்களின் விலைக்கும் இடையே மிகப் பெரிய இடைவெளி காணப்படுவதே இதற்குக் காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பில் ஒருவரின் சராசரி மாத வேதனம் சுமார் 70 ஆயிரத்து 452 ரூபாயாகக் காணப்படும் நிலையில், நகரின் மையப்பகுதியில் ஒரு சதுர அடி நிலத்தின் விலை சுமார் ஒரு இலட்சத்து 8 ஆயிரத்து 442 ரூபாயாக உள்ளது.

அதாவது, ஒரு நபர் தனது ஒரு மாத முழுச் சம்பளத்தைக் கொடுத்தாலும் கூட கொழும்பு நகரில் ஒரு சதுர அடி நிலத்தைக் கூட வாங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வீடு வாங்குவது கடினமாகியுள்ளதால், மக்கள் வாடகை வீடுகளை நாட வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. இதனால் வாடகைக் கட்டணங்களும் சடுதியாக அதிகரித்துள்ளன.

கொழும்பு நகரில் ஒரு படுக்கையறை கொண்ட வீட்டின் சராசரி மாத வாடகை ஒரு இலட்சத்து 31 ஆயிரத்து 386 ரூபாயாகும். இது ஒரு சராசரி ஊழியரின் மாதச் சம்பளத்தை விடவும் இரு மடங்கு அதிகமாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு காணிகள் வழங்குவதில் அரசு பாரபட்சம்

## மனோ கணேசன் எம். பி. கவலை

கொழும்பு, ஜன. 26

டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு காணிகள் வழங்குவதில் அரசாங்கம் பார பட்சம் காட்டுகின்றது. இது ஒரு வெளிப்படையான இன பாரபட்ச செயலாகும் என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

டித்வா புயல் காரணமாக மலையக தமிழ் சமூகம் எதிர் கொண்ட சவால்கள் தொடர்பான கலந்துரையாடலொன்று கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில், கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மலையக தமிழ் மக்களுக்கு டித்வா நிவாரணங்கள் முழுமையாக வழங்கப்படவில்லை. வீட்டை சுத்தப்படுத்த 25, 000 ரூபாய் கொடுப்பனவு வழங்கப் பட்டிருந்தாலும் 50 சதவீதமான மலையக மக்களுக்கு முழுமையாக அக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை.

மலையக பகுதிகளில் வாழும் மக்களில் வீதியோர காய்கறி வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்த வர்த்தகர்கள், முறையாக பதிவு செய்யாத காரணத்தால் அவர்களால் நிவாரணத்தை பெற்றுக் கொள்ள முடிய வில்லை. கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டவர்களுக்கும் இன்னும் நிவாரணம் வழங்கப்பட



வில்லை. இவ்வாறு மலையக மக்களுக்கு முறையாக நிவாரணம் மற்றும் நஷ்ட ஈட்டை வழங்காமல் அரசாங்கம் அவர் களை புறக்கணித்துள்ளது.

அரசாங்கம் மலையக மக்களுக்கு இருக்கும் நிவாரண பிரச்னைக்கு விரைவில் ஒரு தீர்வை வழங்கி தாமதமின்றி காணிகளை பெற்றுத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும்"- என்றார்.

(எ)

# வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பிற்பகலில் மழை பெய்யும் சாத்தியம்

கொழும்பு, ஜன. 26

வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யும் சாத்தியம் நிலவுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.


வடமேல் மாகாணத்தில் அடிக்கடி மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பிற்பகல் 02.00 மணிக்குப் பின்னர் ஆங்காங்கே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் காலை வேளையில் சில இடங்களில் பனிமூட்டமான நிலை காணப்படலாம்.

இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக ஏற்படக் கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படும் பாதிப்புகளை குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# நுவரெலியாவில் குவியும் சுற்றுலாப் பயணிகள்



நுவரெலியா, ஜன. 26

நுவரெலியாவில் நிலவும் மாறுபட்ட காலநிலை காரணமாகவும் ஞாயிறு வார விடுமுறை என்பதாலும் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்து காணப்படுகின்றன.

நுவரெலியாவில் பல்வேறு இடங்களில் தற்போது தொடர்ச்சியாக அதிகாலையில் உறை பனிப்பொழிவும், பகல் நேரங்களில் வெப்பமான கால நிலையும், மாலை வேளையில் பனி மூட்டமும் நிலவி வருகின்றது.

இவ்வாறு நிலவும் இதமான காலநிலையை சுற்றுலாப் பயணிகள் மகிழ்ச்சியாக அனுபவித்து வருகின்றனர்.

இவ்வாறான குளு குளு காலநிலையை அனுபவிக்க இலங்கையில் மட்டுமில்லாது, வெளிநாடுகளில் இருந்தும் அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்த வண்ணம் உள்ளனர்.

குறிப்பாக வெள்ளிக்கிழமை மாலை முதல் நுவரெலியாவுக்கு பிரவேசிக்கும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளது.

அதுவும் சனி மற்றும் ஞாயிறு விடுமுறை தினங்கள் என்பதால் சுற்றுலாப் பயணிகள் கூட்டம் அலைமோதுகின்றது.

விக்ரோரியா தாவரவியல் பூங்காவிலும், பழமையான பிரதான தபால் அலுவலகம் பகுதியிலும் நுவரெலியா - பதுளை பிரதான வீதியோரத்தில் உள்ள கிரகரி வாவி பகுதிகளிலும் காலை முதலே ஆயிரக் கணக்கான சுற்றுலா பயணிகள் சூழ்ந்துள்ளமையை அவதானிக்க முடிந்துள்ளது.(எ)

# அரசு ஹற்றன் பிரகடனத்தை மீளவும் வாசிப்பது அவசியம்

## முன்னாள் எம். பி. திலகர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 26

இலங்கையில் மலையகத் தமிழர்களை இன்னமும் முழுமையான பிரஜைகளாக ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை பல தேசிய கொள்கைப் பத்திரங்கள் உறுதி செய்கின்றன.

அதேபோல பெருந்தோட்டங்களை இன்னும் இருபது வருடங்களில் இல்லாமல் ஆக்கிவிட தெளிவான கொள்கை வரைபை இலங்கை அரசு கொண்டுள்ளது.

மலையக அரசியல் பக்கத்தின் தொடர் செயல்பாடுகள் யார் ஜனாதிபதியானாலும் மலையக மக்களின் காணி, வீடு, புதிய கிராம உரிமைகள் வென்றெடுப்பதற்கான அரசியல் அழுத்தத்தை வழங்கியே உள்ளன.

இந்தப் பின்னணியில் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் போன்ற கொள்கைப் பரப்புரையாளர்கள் மலையகத் தமிழர்களை இலங்கையின் முழுமையான பிரஜைகளாக ஏற்றுக் கொள்ளும் வகையிலான கொள்கை வரைபை சமூகத் தரப்பினருடன் இணைந்து தயாரித்து அதனை அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

அதேபோல நடப்பு அரசாங்கம் அவர்களது ஹற்றன் பிரகடனத்தை மீளவும் வாசித்துக் கொள்வது அவசியம் என மலையக அரசியல் அரங்கத்தின் செயலாளரும் நுவரெலியா மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் திலகராஜா தெரிவித்துள்ளார்.

டித்வா புயல் அனர்த்தத்தின் பின்னர் மலையகத் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் எனும் தலைப்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் கலந்தாய்வு கூட்டம் ஒன்றை நடத்தியது.

அரசியல்வாதிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், இராஜதந்திரிகள், சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்த இந்த கலந்துரையாடலில் பங்குபற்றி கருத்து தெரிவிக்கும் போதே திலகர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (எ)

# தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு ஜனவரி முதல் அமுல்

நுவரெலியா, ஜன. 26

தோட்டத் தொழிலாளர்களின் பிரச்னைகளுக்குத் தீர்வுகளை வழங்கி, ஜனாதிபதியின் தலைமையீட்டுடன் அவர்களது சம்பளத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்த தற்கமைய ஜனவரி மாதம் முதல் அந்தத் தொகை தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் என்று பிரதியமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

இதற்காக வரவு - செலவுத் திட்டத்தில் 5,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை கொடக்கவெல பகுதியில் அமைந்துள்ள தேசிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர்களின் அனைத்து அடிப்படை வசதிகளையும் மேம்படுத்திக் கொடுக்க அரசாங்கம் என்ற ரீதியில் அர்ப்பணிப்புடன் செயல்படுவோம் என தெரி வித்தார்.

(எ)

# மட்டக்களப்பு கிரான் பகுதியில் மகாவலி காணி மீள்பரிசீலனை

## இன வேறுபாடு இன்றி அனுமதி வழங்கப்படும்

கொழும்பு, ஜன. 26

மட்டக்களப்பு மாவட்ட கிரான் பிரதேசத்தில் மகாவலி காணிகளை பரிசீலித்து பொது மக்களுக்கு அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இதன்போது இன வேறுபாடு பார்க்கப்போவதில்லை என்று காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர் அரவிந்த செனரத் விதாரண தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வாய் மூல விடைக்கான வினாக்கள் நேரத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் எம். எஸ். உதுமாலெப்பை எழுப்பிய இடைபீட்டு கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

உதுமாலெப்பை எம்.பி தனது கேள்வியின்போது, மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்த காலத்தில் காணிகளில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் யுத்தம் நிறைவடைந்து 2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் புனானை அணைக்கட்டு, பொத்தானை கிராமத்தில் மீள் குடியேறி வாழ்ந்து வருகின் றார்கள்.

இவ்வாறு குறித்த கிராம உத்தியோகத்தர் பிரிவில் புனானை அணைக்கட்டு, பொத்தானையில் மீள் குடியேறிய முஸ்லிம் குடும்பங்களை தவிர்த்து ஏனையவர்களுக்கு காணிகளுக்கான ஆவணங்களை கிரான் பிரதேச செயலகம் வழங்கி உள்ளது- என்றார்.

எடுக்கப்படும். அத்துடன் அது தொடர்பான ஆவணங்களை சமர்ப்பியுங்கள்- என்றார். (எ)

# திருமலை- உப்பூறல் கிராமத்தில் 6 வீடுகள் யானைகளால் சேதம்!

திருகோணமலை, ஜன. 26

திருகோணமலை மாவட்டத்தில் வெருகல் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள உப்பூறல் கிராமத்துக்குள் நேற்று முன் தினம் சனிக்கிழமை அதிகாலை உட்புகுந்த காட்டு யானைகள் வீடுகளை சேதப்படுத்தியுள் ளன.

அத்தோடு வீட்டிலிருந்த உபகரணங்களும் காட்டு யானைகளால் சேதமாக்கப் பட்டுள்ளன.

கடந்த இரண்டு மாதங்களுக்குள் உப்பூறல் கிராமத்தில் ஆறு வீடுகள் காட்டு யானைகளால் சேதமாக்கப்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அத்தோடு காட்டு யானைகளால் சேதமாக்கப்பட்ட வீடு



களுக்கு இதுவரை நஷ்ட ஈடுகள் கிடைக்கப்பெறவில்லை எனவும் பிரதேச மக்கள் கூறினர்.

எனவே, இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டு காட்டு யானைகளால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு நஷ்டஈடு பெற்றுத் தர வேண்டும் என வெருகல் -உப்பூறல் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாண...

அத்துடன், பயங்கர வாத எதிர்ப்பு தொடர் பான புதிய சட்டங்களை இலங்கை பரிசீலித்து வரும் நிலையில், அத்தகைய சட்டக் கட்டமைப்புகள் அடிப்படைச் சுதந்திரங்களைப் பாதுகாப்பதை உறுதி செய்வது முக்கியம் என்றும் வலியுறுத்தினார்.

கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்றையதினம் ஜனநாயகம் மற்றும் நல்லாட்சிக்கான கல்வி நிறுவனத்தில் "ஜனநாயகம் மற்றும் உள்ளூராட்சி நிர்வாகம்" மற்றும் "பாராளுமன்ற நிர்வாகம்" தொடர்பிலான நிறைவேற்றுக் கற்கை நெறிகளை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு முன்னாள் சபாநாயகரும், நிறுவனத்தின் ஸ்தாபகருமான கரு ஜயசூரிய தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்-

இலங்கையின் ஜனநாயக நிறுவனங்களின் அடித்தளத்தை வலுப்படுத்தும் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் கற்கை நெறியை விசேடமாக பூர்த்தி செய்ததையிட்டு வாழ்த்துவதோடு அதிகளவிலான பெண்களையும் இங்கே காண்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

நீண்டகாலமாக ஒழுக்கமான தலைமைத்துவம், பிரஜைகளுக்கான கல்வி மற்றும் ஜனநாயக சீர்திருத்தங்களுக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றி வரும் கரு ஜயசூரியவின் முயற்சிக்கு ஆதரவளிப்பதில் சுவிட்சர்லாந்து பெருமை கொள்கிறது.

இலங்கை தற்போது எதிர்நோக்கி வரும் அரசியல் மற்றும் நிறுவன மாற்றங்களின் போது, கொள்கை ரீதியான தலைமைத்துவமும் திறமையான நிர்வாகமும் மிகவும் அவசியமாகும். இத்தகைய பயிற்சித் திட்டங்கள் அந்த அடித்தளத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாப்பதிலும், மக்களின் பல்வேறு அபிலாஷைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதிலும் பாராளுமன்றம் தனித்துவமான பொறுப்பைக் கொண்டுள்ளது. தொழில்முறை மற்றும் ஒழுக்க மேம்பாட்டிற்கான உங்கள் அர்ப்பணிப்பு அந்த நிறுவனத்தையும், அதன் மூலம் நாட்டையும் வலுப்படுத்துகிறது. ஆந்த வகையில் பாராளுமன்ற நிர்வாகக் கற்கையை பூர்த்தி செய்துள்ள நீங்கள் உண்மையில் ஒரு இயங்கும் ஜனநாயகத்தின் மையமாகவும் இதயமாகவும் இருக்கிறீர்கள்.

அதேபோல், உள்ளூராட்சி நிர்வாகத்தில் நிறைவேற்றுச் சான்றிதழ் பாடநெறியும் முக்கியத்துவம் வாய்ந்தது. உள்ளூர் அதிகார சபைகள் நாட்டிற்கும் மக்களுக்கும் இடையிலான நேரடித்தொடர்பை உருவாக்குகின்றன. அவை திறம்படச் செயற்படும்போது பொதுமக்களின் நம்பிக்கை வளர்கிறது. அவை தடுமாறும்போது நம்பிக்கை சிதைகிறது.

வலுவான உள்ளூராட்சி நிர்வாகமே பதிலளிக்கக்கூடிய ஜனநாயகத்தின் அடித்தளமாகும். சுவிட்சர்லாந்தின் பார்வையில், மக்களின் அடிப்படைத் தேவைகளைத் தீர்ப்பதில் உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகளின் பங்கு முக்கியமானது. அவர்கள் மக்களுக்கு நெருக்கமானவர்கள்.

இலங்கையின் ஜனநாயகக் கட்டமைப்பின் மூன்றாவது தூணான மாகாண சபை முறையின் முக்கியத்துவத்தை நான் சுருக்கமாக நினைவுகூர விரும்புகிறேன். நிர்வாகம், நாடாளுமன்றம் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுடன் இணைந்து, மாகாண சபைகள் நிர்வாகத்தைப் பிராந்தியங்களுக்கு நெருக்கமாகக் கொண்டு வருவதற்கும் பல்வேறு சமூகங்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்கும் வடிவமைக்கப்பட்ட அரசியலமைப்பு ரீதியான நிர்வாக அமைப்பாகும்.

தற்போது, நீங்கள் நன்கு அறிந்தபடி, பல ஆண்டுகளாகத் தேர்தல்கள் நடத்தப்படாததால் மாகாண சபைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லை. இந்தத் தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கம் தனது உறுதிப்பாட்டைத் தெரிவித்துள்ள நிலையில் அதற்கு அவசியமான படிமுறைகளை முன்னெடுப்பது முக்கிய நடவடிக்கையாகும்.

அதேவேளையில், ஒரு முழுமையான ஜனநாயகம் என்பது வலுவான நிறுவனங்களை மட்டுமல்லாமல், துடிப்பான சிவில் சமூகம் மற்றும் கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றையும் சார்ந்துள்ளது. இவை குடிமக்கள், ஊடகங்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பகிரங்க விவாதங்களில் ஈடுபட அனுமதிக்கின்றன. இவை சமூகங்கள் சவால்களை அமைதியான முறையில் எதிர்கொள்ள உதவும் அத்தியாவசியப் பாதுகாப்புகளாகும்.

பயங்கரவாத எதிர்ப்பு தொடர்பான புதிய சட்டங்களை இலங்கை பரிசீலித்து வரும் நிலையில், அத்தகைய சட்டக் கட்டமைப்புகள் அடிப்படைச் சுதந்திரங்களைப் பாதுகாப்பதை உறுதி செய்வது முக்கியம். நாட்டைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் தற்செயலாக ஜனநாயக வெளியைக் கட்டுப்படுத்தவோ அல்லது நியாயமான சிவில் செயற்பாடுகள் மற்றும் விமர்சனங்களை முடக்கவோ கூடாது.

சுவிட்சர்லாந்தின் அனுபவத்தின் பிரகாரம், ஜனநாயகத்திற்குத் தொடர்ச்சியான முதலீடுகள் தேவையாகவுள்ளன. எமது நாட்டில், உள்ளூர் சுயாட்சி மற்றும் நேரடிப் பங்கேற்பு, அதிகாரப்பகிர்வு ஆகியவை பல்வேறு சமூகங்களுக்கிடையில் ஸ்திரத்தன்மை மற்றும் ஒத்துழைப்பை உறுதி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இவை மற்றவர்களுக்கு வழங்கும் கட்டளைகள் அல்ல, மாறாக ஜனநாயக அமைப்புகள் எவ்வாறு பரிணமிக்கலாம் மற்றும் நிலைத்து நிற்கலாம் என்பதற்கான உதாரணங்கள் மட்டுமேயாகும் என்பதை இங்கு குறிப்பிடுகின்றேன்.

அனுபவப்பகிர்வு என்ற அடிப்படையிலேயே சுவிட்சர்லாந்து இலங்கையின் நிர்வாகத்தை வலுப்படுத்துவதற்கும், உள்ளூர் பிரதிநிதித்துவத்தை மேம்படுத்துவதற்கும், அறிவார்ந்த அரசியல் கலாசாரத்தை வளர்ப்பதற்கும் ஆதரவளிக்கிறது.

ஒவ்வொரு நாடும் தனக்கென ஒரு பாதையைக் கண்டறிந்தாலும், உரையாடல், குடிமக்களுடனான நெருக்கம் மற்றும் பகிரப்பட்ட பொறுப்பு ஆகியவை உலகெங்கிலும் உள்ள அனைத்து ஜனநாயக நாடுகளுக்கும் பொருந்தும் மதிப்புகளாகும்-என்றார். (அ)

## பாராளுமன்ற...

கூறப்படுகிறது.

இலங்கை தமிழசுக் கட்சியின் உயர்மட்டக்குழு கூடி, இந்த விடயம் தொடர்பில் விரிவாக கலந்துரையாடியுள்ளது.

இதனையடுத்து, குறித்த கலந்துரையாடலில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே. சிவஞானத்திடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியபோது, அவர் கூட்டத்தில் கலந்துரையாடிய விடயங்களை வெளிப்படுத்தினார்.(அ)

## முன்பள்ளி...

தொடர்பான பல குறைபா டுகள் தீர்க்கப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

காரைநகர், புதுவீதியில் அமைந்துள்ள அம்பாள் முன்பள்ளியின் புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கோலாகலமாக நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு புதிய கட்டடத்தைத் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பிள்ளைகளின் ஆளுமை விருத்தியில் முன்பள்ளிக் கல்வியே முக்கிய பங்காற்றுகின்றது. அதுவே சிறந்ததொரு எதிர்காலச் சமூகத்துக்கான அத்திவாரமுமாகும். பெற்றோர்கள் பாடங்களைக் கற்பிக்கும் இடங்களை விட, நல்ல பழக்கவழக்கங்களைப் போதிக்கும் இடங்களிலேயே தங்கள் பிள்ளைகளைச் சேர்க்க வேண்டும். சிறுபராயத்தில் அவர்கள் பழகும் நற்பண்புகளே அவர்களைச் சமூகத்தில் சிறந்தவர்களாக வழிநடத்தும்.

இலங்கையில் முன்பள்ளிகள் வெள்வேறு கற்பித்தல் முறைகளைக் கொண்டுள்ளன. இதனைச் சீர்படுத்தி, ஒருங்கமைக்கப்பட்ட பாடத்திட்டத்தைக் கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. வடக்கு மாகாண சபையால் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு போதாது என்பதை நான் அறிவேன்.

தற்போதைய நிலையில் அதனை உடனடியாக அதிகரிக்க முடியாவிட்டாலும், எதிர்காலத்தில் அரசாங்கம் இதனை ஒரு நிரந்தரக் கட்டமைப்புக்குள் கொண்டு வரும்போது இப்பிரச்னைகளுக்குத் தீர்வு கிட்டும்.

1970ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இம்முன்பள்ளி, இன்று மக்களின் பங்கேற்புடன் மிகப் பிரமாண்டமாகக் கட்டப்பட்டுள்ளது. மக்கள் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகள் எப்போதும் நிலைத்து நிற்கும். காரைநகர் போன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க பிரதேசத்தில், நவீன வசதிகளுடன் கூடிய இக்கட்டடம் அமைந்தமை மாணவர்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும். முன்பள்ளியின் எஞ்சியுள்ள தேவைகளை மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டின் ஊடாக நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

பிள்ளையார் சனசமூக நிலையம் மற்றும் அம்பாள் முன்பள்ளி நிர்வாகத்தினரின் ஏற்பாட்டில், சனசமூக நிலையத் தலைவர் நா.பாலகிருஷ்ணன் தலைமையில் இந் நிகழ்வில் நடைபெற்றது. (அ)

## கிவுல்...

முன்னெடுக்கப்படுவதாக கூறப்படுவது முற்றிலும் தவறானதும், அரசியல் உள்நோக்கத்துடன் பரப்பப்படும் தவறான தகவ ல்களுமே என அவர் தெரிவித்துள்ளார்.

கிவுல் ஓயா திட்டம், குறிப்பிட்ட ஒரு இனத்திற்கோ அல்லது சமூகத்திற்கோ எதிரானதாக அல்லாது, தேசிய அபிவிருத்தி, விவசாய வளர்ச்சி மற்றும் நீர்வள முகாமைத்துவத்தை இலக்காகக் கொண்டு வடிவமைக்கப்பட்ட ஒரு அரசாங்கத் திட்டம் என அமைச்சர் வலியுறுத்தியுள்ளார். "இந்த ஆட்சியின்கீழ் இனவாதத்துக்கும் மதவாதத்துக்கும் எந்தவிதமான இடமும் இல்லை. அனைத்து மக்களையும் சமமாகக் கருதும் கொள்கையுடனேயே அரசாங்கம் செயல்படுகிறது" என அவர் தெளிவுபடுத்தினார்.

தமிழ் மக்களின் நில உரிமைகளும், சமூக உரிமைகளும் முழுமையாகப் பாதுகாக்கப்படும் என்றும், எந்த ஒரு சமூகமும் அநீதிக்குள்ளாக்கப்பட அனுமதிக்கப்படமாட்டாது என்றும் உறுதியளித்தார். சட்டத்துக்கு முரணான நில கையகப்படுத்தல்கள் எதுவும் இடம்பெறாது என்றும், திட்டம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் உரிய சட்ட நடைமுறைகளின் கீழேயே மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், கிவுல் ஓயா திட்டத்தின் மூலம் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விவசாய உற்பத்தி அதிகரிக்கப்படுவதோடு, ஆயிரக்கணக்கான விவசாயக் குடும்பங்களுக்கு நிலையான நீர்ப்பாசன வசதி கிடைக்கும் என அமைச்சர் குறிப்பிட்டார். இந்த திட்டத்தை இன அரசியல் கண்ணோட்டத்தில் பார்க்காமல், நாட்டின் நீண்டகால அபிவிருத்தித் தேவையாகக் கருதி அணுக வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார். (அ)

## முக்கிய...

ஊடகங்களினால் தூண்டப்பட்டவை என திணைக்களத்தின் உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

குறிப்பாக, மகர சிறைச்சாலை கலவரம், கொஸ்கொட விசேட அதிரடிப்படை துப்பாக்கிச் சூடு மற்றும் ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க படுகொலை ஆகிய மூன்று முக்கிய வழக்குகளின் முன்னேற்றத்திற்கு சட்டமா அதிபரே தடையாக இருப்பதாகத் தவறான பிம்பம் உருவாக்கப்பட்டுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அரசாங்கத்திடமிருந்தோ அல்லது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடமிருந்தோ ஏதேனும் அழுத்தம் உள்ளதா எனக் கேட்டபோது, சட்டமா அதிபர் ஜனாதிபதியுடன் சிறந்த தொழில்முறை உறவைப் பேணுவதாகவும், புலனாய்வு அறிக்கைகளில் போதிய ஆதாரங்கள் இல்லாமல் வழக்குகளைத் தொடர முடியாது என்றும் அதிகாரிகள் விளக்கமளித்தனர்.

11 கைதிகள் கொல்லப்பட்ட மகர சிறைச்சாலை கலவரம் வழக்கில், குற்றச்சாட்டுகளைத் தொடர போதுமான ஆதாரங்கள் ,ல்லை என்பதால் அதனை முன்னெடுத்துச் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டது.

இதனை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுவை அண்மையில் நீதிமன்றம் தள்ளுபடி செய்தமை திணைக்களத்தின் முடிவு சரியானது என்பதை உறுதிப்படுத்துவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், கொஸ்கொட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் நேரில் கண்ட சாட்சிகளோ அல்லது உறுதியான ஆதாரங்களோ இல்லை என்றும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

2009 ஆம் ஆண்டு நிகழ்ந்த லசந்த விக்ரமதுங்கவின் படுகொலை தொடர்பான விசாரணைகள் ஐந்து ஆண்டுகள் தாமதமாகவே மீண்டும் தொடங்கப்பட்டதாகவும், அதில் பல நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுவதாகவும் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

## வைத்திய...

ஈடுபட்டு வந்த நிலையில், தாம் முன்னெடுத்து வந்த பணிப்புறக்கணிப்பினை நேற்று காலை 8 மணியுடன் நிறைவுக்கு கொண்டு வந்தனர். எனினும் இன்று முதல் நாடு தழுவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளில் அரச வைத்தியர்கள் தொடர்ச்சியான தொழிற்சங்க போராட்டத்தை முன்னெடுக்க தீர்மானித்துள்ளனர். (அ)

## புதிய...

மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்காக நல்லாட்சி அரசாங்கம் முன்னெடுத்த நடவடிக்கைகளை விரைவுபடுத்தி ஆட்சிக்கு வந்தவுடன் புதிய யாப்பினை உருவாக்குவதாக தேசிய மக்கள் சக்தி நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கியது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆட்சிக்கு வந்து ஒருவருடம் நிறைவடைந்துள்ளது. ஆனால் புதிய அரசியலமைப்பு உருவாக்கம் பற்றியோ அல்லது நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை நீக்கம் பற்றியோ பாராளுமன்றத்திலோ அல்லது பொது இடங்களிலோ ஏதம் குறிப்பிடவில்லை.

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி பதவியின் மோகத்துக்கு ஜனாதிபதியும் அடிபணிந்து விட்டார் என்றே தோன்றுகிறது. கடந்த காலங்களில் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை நாட்டுக்கு சாபம், வெஷ்மினிஸ்டர் முறைமையிலான பாராளுமன்ற ஆட்சி முறைமை சிறந்தது என்று பாராளுமன்றத்தில் உரையாற்றினார்.ஆனால் தற்போது நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை நீக்கத்தில் மௌனம் காக்கிறார்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும், மாகாண சபை முறைமை பலப்படுத்தப்பட வேண்டும்.புதிய யாப்புருவாக்கம் தொடர்பில் எண்ணக்கரு பத்திரம் சமர்ப்பிக்கப்படும் என்று பிரதமர் பாராளுமன்றத்துக்கு அறிவித்தார், எவ்வித ஆரம்ப கட்ட நடவடிக்கைகளும் எடுக்காத காரணத்தால் மூன்று மாதங்களுக்கு பின்னரும் அதே கேள்வியை கேட்டேன் அதற்கும் " எண்ணக்கரு பத்திரம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும்" என்றே பதிலளித்தார்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் எண்ணக்கரு பத்திரம் சமர்ப்பிப்பு என்பது வெறும் அறிவிப்பாகவே காணப்படுகிறது. புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்குரிய ஆரம்பக்கட்ட எவ்வித நடவடிக்கைகளையும் அரசாங்கம் இதுவரையில் எடுக்கவில்லை.

நாட்டில் நடைமுறையில் காணப்படும் அடிப்படை பிரச்னைகளுக்கு தீர்வு காணபதற்காக ஒட்டுமொத்த மக்களின் அபிலாசைகளையும் கோரி புதிய யாப்பினை உருவாக்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஓரிரு மாதங்களில் அரசியலமைப்பை உருவாக்க முடியாது.

அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் வெளிப்படையான பேச்சுவார்த்தைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். நடைமுறையில் உள்ள அரசியலமைப்பில் பல குறைப்பாடுகளில் காணப்படுகிறது. ஆகவே புதிய யாப்பினை உருவாக்கும் செயற்பாடுகளை அரசாங்கம் வெளிப்படையாக முன்னெடுக்க வேண்டும். பத்தரமுல்ல கட்சி காரியாலயத்தில் இருந்துக் கொண்டு யாப்புருவாக்க பணிகளை முன்னெடுக்க முடியாது-என்றார். (அ)

## துணை...

இதேவேளை, கடந்த சில மாதங்களாக கணக்காய்வாளர் நாயகம் பதவி வெற்றிடமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# எல்லை நிர்ணய குழுவை மீள நியமித்தால் மாகாண தேர்தல் சாத்தியமற்றதாகிவிடும்

## எல்லை நிர்ணய குழுவின் சமன் சிறீ ரத்நாயக்க



கொழும்பு, ஜன. 26

எல்லை நிர்ணயம் தொடர்பில் ஆராய்வதற்கு மீண்டும் ஒரு குழுவை நியமித்தால் மாகாண சபைகள் தேர்தலை நடத்துவது சாத்தியமற்றதாக அமையும். பாராளுமன்றத்தால் புதிதாக நியமிக்க உத்தேசிக்கப்பட்ட குழுவில் முன்னிலையாகி எல்லை நிர்ணயம் தொடர்பான விபரங்களை எடுத்துரைக்க நாங்கள் தயாராகவுள்ளோம். முறையான பரிசீலனைகள் ஏதும் இல்லாமலே எல்லை நிர்ணய அறிக்கை நிராகரிக்கப்பட்டது - என்று எல்லை நிர்ணய குழுவின் செயலாளரும் தேர்தல்கள் ஆணைக் குழுவின் முன்னாள் ஆணையாள ருமான சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகள் தேர்தல் குறித்து அவரிடம் கேள்வி எழுப்பியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "தேர்தல் காலத்தில் நாட்டில் இனவாதம், மதவாதம் ஆகியவற்றை முன்னிலைப்படுத்திய பிரசாரங்கள், தேர்தல் சட்டத்துக்கு முரணான செயல்பாடுகள் இடம்பெறுவதற்கு விருப்பு வாக்கு முறைமை பிரதான காரணியாக காணப்படுகிறது.

தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக அரசியல்வாதிகளில் ஒருசிலர் தேர்தல் சட்டத்துக்கு முரணாக செயல்படுகிறார்கள். ஒருசிலர் இனவாதம், மதவாதம் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி செயல்படுகிறார்கள். வடக்கு, கிழக்கு, தெற்கு என சகல மாகாணங்களிலும் இவ்வாறான நிலையே காணப்படுகிறது.

அரசமைப்பால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மாகாண சபைகள் தேர்தலை பல்வேறு காரணிகளால் நடத்தாமல் இருப்பது முறையற்றது.

எல்லை நிர்ணய விடயத்தை குறிப்பிட்டுக் கொண்டு மாகாண சபைகள் தேர்தல் தொடர்ந்து பிற்போடுவது முறையற்றது.

2017ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட எல்லை நிர்ணய அறிக்கையை அரசியல்வாதிகள் முழுமையாக பரிசீலனை செய்யாமலே எதிர்த்தார்கள். அப்போதைய சூழலில் நாட்டில் ஸ்திரமற்ற அரசியல் நிலைமை காணப்பட்டமை இதற்கு ஒரு காரணியாகும்.

மாகாண சபைகள் தேர்தலை எந் தத் தேர்தல் முறைமையில் நடத்து வது என்று ஆராய்ந்து விதப்புரை கள் மற்றும் யோசனைகளை முன் வைப்பதற்கு 12 பேரை உள்ளடக் கிய வகையில் குழு ஒன்றை நியமிக்கும் யோசனை முன்வைக்கப் பட்டுள்ளதை அறிய முடிகிறது.

எல்லை நிர்ணயம் தொடர்பில் ஆராய்வதற்கு மீண்டும் ஒரு குழுவை நியமித்தால் மாகாண சபைகள் தேர்தலை நடத்துவது சாத்தியமற்றதாக அமையும். இந்தக் குழுவில் முன்னிலையாகி எல்லை நிர்ணயம் தொடர்பான விவரங் களை எடுத்துரைக்க நாங்கள் தயாராகவுள்ளோம்.

முறையான பரிசீலனைகள் ஏதும் இல்லாமலே எல்லை நிர்ணய அறிக்கை நிராகரிக்கப்பட்டது.

ஆகவே, இந்த விடயத் தில் உண் மைகளை வெளிப்படுத்த எமக்கு வாய்ப்பளிக்க வேண்டும் - என்றார். (ஐ)

## 21 கோடி மதிப்புள்ள போதைப்பொருளுடன் கட்டுநாயக்காவில் 4 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, ஜன. 26

21 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியான போதைப்பொருட்களுடன் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் தடுப்பு பிரிவினால் இரு வேறு சந்தர்ப்பங்களில் இவர்கள் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஓமானிலிருந்து விமானம் கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு வந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

3 சந்தேகநபர்களின் உடைமைகளில் இருந்து 10 கிலோ 394 கிராம் குஷ் மற்றும் ஒரு கிலோ 912 கிராம் ஹஷிஷ் போதைப்பொருளும் கண்டெடுக்கப்பட்டன. இவற்றின் மொத்த மதிப்பு சுமார் 13 கோடியே 39 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதானவர்களில் இருவர் நாத்தாண்டியாவை சேர்ந்த 29 வயதுடைய ஒரு வர்த்தகர் மற்றும் ஒரு கட்டடத் தொழிலாளி. மற்றையவர் கொழும்பு - கிராண்ட்பாஸ் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய வர்த்தகர் எனத் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட மூன்று பயணிகளும் போதைப் பொருட்களும் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இதேநேரம், மற்றொரு சம்பவத்தில் 8 கோடி ரூபாய் பெறுமதியான குஷ் ரக போதைப்பொருளுடன் 37 வயது நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவர், இரவு விடுதி ஒன்றில் தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தரா கப் பணிபுரிபவர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

## 10 வருடங்களாக மணல் அகழ்வில் ஈடுபட்ட டிப்பர் வாகனம் சிக்கியது

வடமராட்சி, ஜன. 26

பருத்தித்துறையில் சுமார் 10 வருடங்களாக சட்ட விரோதமாக மணல் ஏற்றிய டிப்பர் டிப்பர் வாகனம் பறிமுதல் செய்யப்பட்டதுடன் அதன் சாரதியும் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் இரவு விசேட அதிரடிப் படையினர் முன்னெடுத்த நடவடிக்கையில் கைது செய்யப்பட்ட இவர்கள் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட டிப்பர் வாகனம் சுமார் 10 வருடங்களாக மாமுனை, செம்பியன்பற்று பகுதிகளில் மணல் அகழ்வில் ஈடுபட்டு வந்தமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இதனிடையே, இந்தச் சம்பவத்தின் போது மற்றொரு டிப்பர் வாகனமும் கைப்பற்றப்பட்டு அதன் சாரதியும் கைது செய்யப்பட்டிருந்தார். அதற்கு உரிய ஆவணங்கள் காணப்பட்டமையால் சாரதி வாகனத்துடன் விடுவிக்கப்பட்டார் என்றும் பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-02-08)

## யாழ். இந்துவில் சிவலிங்கம் அகற்றம் மனுவை விசாரணைக்கு ஏற்றது உயர்நீதிமன்று

கொழும்பு, ஜன. 26

யாழ். இந்துக் கல்லூரியில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த சிவலிங்கம் கல்லூரி அதிபரால் அகற்றப்பட்டமைக்கு எதிராக மூன்று மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் வழக்கை விசாரணைக்கு எடுக்க உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த வழக்கு, இலங்கை அரசமைப்பின் உறுப்புரைகள் 10, 12(1), 12(2), 14(1)(ந) மற்றும் 14(1)(க) ஆகியவற்றுக்கு முரணாக முதலாம் எதிர்மனுதாரர் செயல்பட்டுள்ளார் என்ற அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை பிரதம நீதியரசர் பத்மன் சூரசேன, நீதியரசர்களான அச்சல வெங்கப்புலி, மேனகா விஜேசுந்தர ஆகியோரின் அமர்வில் விசாரணைக்கு வந்தது. இதன்போதே இந்த வழக்கை எதிர்வரும் ஜூலை 7ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

கடந்த 2018ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்கம் அப்போதைய அதிபரால் அகற்றப்பட்டதுடன், பின்னர் அதனை வேறோர் இடத்தில் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்தே குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ஐ)

## வெள்ள வாய்க்காலில் வீட்டு கழிவு நீரை விட்டவருக்கு ரூ. 5,000 தண்டம்

வடமராட்சி, ஜன. 26

வீட்டு கழிவு நீரை வீதியில் செல்லும் வெள்ள வாய்க்காலுக்குள் விட்டவருக்கு 5ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை தென் கிழக்கு பிரதேசத்தை சேர்ந்த குடியிருப்பாளர் தனது வீட்டில் இருந்து வெளியேறும் கழிவு நீரை வெள்ள வாய்க்காலுக்கு திருப்பியுள்ளார்.

இதனால் அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதாக வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்துக்கு முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது.

இதற்கமைவாக சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டு அவருக்கு எதிராக வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் பொதுச்சுகாதார பரிசோதகர் ப. தினேஷ் எடுத்தார்.

இந்த வழக்கில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட நபருக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் 5 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து கடந்த வெள்ளிக்கிழமை தீர்ப்பளித்தது. (ஐ)

## தேசிய இலக்கிய விழாவில் வவுனியா மாணவி 2ஆம் இடம்



வவுனியா, ஜன. 26

தேசிய இலக்கிய விழாவில் வவுனியா சின்னடம்பன் பாரதி வித்தியாலய மாணவி இரண்டாம் இடத்தை பெற்றுள்ளார்.

கொழும்பு - பத்தரமுல்லையின் சுஹதிருபாய பிரதான மண்டபத்தில் அண்மையில் நடந்த தேசிய இலக்கிய விழாவில் அதிசிரேஷ்ட பிரிவின் கீழ் புதுக்கவிதை போட்டியில் செந்தில்குமரன் தமிழருவி என்ற மாணவியே இரண்டாம் பரிசைப் பெற்றிருந்தார். (ஐ-10)

## அரசாங்கத்தை பாதுகாப்பதற்காக சட்டத்துக்கு முரணான செயல்பாடு!

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 26

தமது அரசாங்கத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக நாட்டின் கலாசாரம், மதம், சட்டங்களுக்கு முரணாக வேனும் செயல்பட தற்போதைய ஆட்சியா ளர்கள் தயாராக உள்ளமை லால் காந்தவின் உரையின் மூலம் தெளிவாகிறது என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பு நெலும் மாவத்தையிலுள்ள கட்சித் தலைமையகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் குறிப்பிட்டார்.

நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவிக்கையில்,

"கோர்ட் அணிந்திருப்பவர்களைத் தாக்குவேன் எனக் கூறியது சட்டத்தைத் தாக்குவதாகும். காவி அங்கி அணிபவர்களைப் பற்றி அவர்கள் கவலைப்பட மாட்டார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதன் பொருள் அரசாங்கத்தில் உள்ளவர்கள் தங்கள் உயிர் வாழ்வுக்காக உள்ளூர் கலாச்சாரத்தையும் மதங்களையும் அழிக்கத் தயாராக இருக்கின்றனர் என்பதுதான். ஜனாதிபதியின் மனம் சிறிதளவு காயப்பட்டாலும், பொலிஸ் மா அதிபரும் குற்றப்புலனாய்வுத் திணைக்களமும் ஏனைய அனைத்து வேலைகளையும் நிறுத்திவிட்டு ஜனாதிபதியின் மனதை ஆற்றுப்படுத்துவதிலேயே குறியாக உள்ளனர்.

மக்கள் "அன்தரே"யின் கதைகளைக் கேட்டு சிரித்துக் கைதட்டியதைப் போல இன்று பொய்களை நம்பி ஏமாந்துள்ளனர். இறுதியில் அன்தரே ராஜாவானதைப் போல, இன்று ஜனாதிபதி அதிகாரத்துக்கு வந்து தனது குரோதத்தையும் பொறாமையையும் வெளிப்படுத் துகிறார்.

இந்த அரசாங்கத்திடம் நிலையான ஒரு கொள்கை இல்லை. 159 பாராளுமன்ற உறுப்பினர்களும் 159 விதமான கொள்கைகளையே கொண்டுள்ளனர். சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் யு. எஸ். எய்ட் போன்றவற்றின் நிகழ்ச்சி நிரல்களை ஒரு குழு முன்னெடுக்கும் அதேவேளை, கட்சியின் ஆரம்பகாலக் கொள்கைகளை நம்பியிருந்த அடிமட்டத் தொண்டர்கள் இன்று நிர்க்கதியாகியுள்ளனர். - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.01.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.